

# உதயன்

சுடர் : 41
கதிர் : 192

சனிக்கிழமை
06 ஜூன் 2026

வைகாசி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


குற்றப்பின்னணிகள் உள்ள

# அரசியல்வாதிகள் விரைவில் கைது!

## எங்கிருந்தாலும் தப்பமுடியாது
## அமைச்சர் ஹர்ஷன உறுதி

**கொழும்பு, ஜூன் 6**

**இலங்கையில் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய முன்னாள் அரசியல்வாதிகளைக் கைதுசெய்யும் நடவடிக்கை மிக விரைவில் ஆரம்பமாகும். அத்தகைய நபர்கள் எங்கிருந்தாலும் அவர்களைத் தப்பிக்க விடமாட்டோம் - இவ்வாறு நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**

»11



காணிகளை விடுவிக்குமாறு

## மயிலிட்டி மக்கள் நேற்றும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
மயிலிட்டி பகுதியில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி பொதுமக்கள் நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
வலிகாமம் வடக்கில்

»11

## திட்டமிட்டு ஏமாற்றியது திசைகாட்டி அரசாங்கம்

சுகாதாரப் பணியாளர்கள் போர்



யாழ்ப்பாணம், ஜூன் 6
ஜனாதிபதி அநுர தலைமையிலான திசைகாட்டி அரசாங்கம் தம்மைத் திட்டமிட்டு ஏமாற்றிவிட்டதாகத் தெரிவித்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றுவோர்

»11



## சிவகுமாரனின் நினைவு நேற்று உணர்வுபூர்வம்!

யாழ்ப்பாணம், ஜூன் 6
தமிழின விடுதலைப் போராட்டத்தின் முன்னோடி தியாகி பொன்.சிவகுமாரனின் 52ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் யாழ். உரும்பிராய்ச் சந்திக்கு அருகிலுள்ள பொன்.சிவகுமாரனின் உருவச் சிலையடியில் இடம்பெற்றது.

»11

தரமற்ற பாணிப்பனாட்டு:

## உற்பத்தியாளர் சிறையில் விற்றவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
தரமற்ற பாணிப்பனாட்டை உற்பத்திசெய்த நபருக்கு 6 மாதகால சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.
பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்கு

»11

## 8 மாகாணங்களில் பெரமுன வெல்லும்

சாந்த பண்டார நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 6
மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால் 8 மாகாணங்களில் பொதுஜன பெரமுனவே ஆட்சியமைக்கும் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஸ்ரீலங்கா பொதுஜன

»11

## எரிவாயு விலையில் மாற்றம் இல்லை!

லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 6
எரிவாயுவின் விலையில் இந்த மாதம் எவ்வித மாற்றமும் செய்யப்படாது என்று லிட்ரோ

»11





## செம்மணிப் புதைகுழியிலிருந்து நேற்று 13 என்புத்தொகுதிகள்!

மூன்று குழந்தைகளுடையவை

யாழ்ப்பாணம், ஜூன் 6
செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து நேற்று 3 குழந்தைகளின் என்புத் தொகுதிகள் உட்பட 11 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.
செம்மணிப் புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 17ஆம் நாள் நடவடிக்கை நேற்று இடம்பெற்றது. இதன்போதே 3 குழந்தை

»11

## தேர்தல் முறை தொடர்பில் தீர்மானிக்க அதிகாரமில்லை

கொழும்பு, ஜூன் 6
தேர்தல் முறை குறித்து தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு இல்லை

»11

## வட்டுக்கோட்டையில் வன்முறைக்குழு அடாவடி

விரிவு பக்கம்:-11

பூச்சந்தி பூராளி

"இப்பிடியே இவையள் எல்லா இடமும் வெல்லுவம் எண்டு வாயால வடை சுடத்தான் சரி கண்டியளோ"

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 05.06.2026 | திகதி 05.06.2026 | திகதி 05.06.2026 | திகதி 05.06.2026 | திகதி 05.06.2026 | திகதி 05.06.2026 | திகதி 05.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4451 | சீட்டிழுப்பு இலக்கம் 1518 | சீட்டிழுப்பு இலக்கம் 0477 | சீட்டிழுப்பு இலக்கம் 2557 | சீட்டிழுப்பு இலக்கம் 6209 | சீட்டிழுப்பு இலக்கம் 2239 | சீட்டிழுப்பு இலக்கம் 0325 |
| ஆங்கில எழுத்து L | வெற்றி இலக்கினம் துலாம் | ஆங்கில எழுத்து S | ஆங்கில எழுத்து R | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கினம் கடகம் |
| | | | சுப்பர் இலக்கம் 02 | | | |
| வெற்றி இலக்கங்கள் 12 30 59 63 | வெற்றி இலக்கங்கள் 06 09 11 43 | வெற்றி இலக்கங்கள் 6 9 6 3 | வெற்றி இலக்கங்கள் 01 55 62 80 | வெற்றி இலக்கங்கள் 1 5 0 5 7 5 | வெற்றி இலக்கங்கள் 05 16 58 66 | வெற்றி இலக்கங்கள் 05 59 66 |
| விசேட எழுத்து L | | | | | விசேட எழுத்து E | |

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி மருந்துகள் விலையேறும்!

## மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 6

**அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளமையால், மருந்துப் பொருள்களின் விலை அதிகரிப்பது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளதாவது-

இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் மற்றும் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படும் சில மருந்துப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படவுள்ளன. வர்த்தமானி மூலம் அதிகபட்ச சில்லறை விலைநிர்ணயம் செய்யப்பட்டுள்ள சுமார் 60 வகையான மருந்து வகைகளின் விலைகளும் இவ்வாறு அதிகரிக்கப்படவுள்ளன. அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதால் அனைத்துப் பொருள்களின் விலையும் அதிகரிக்கலாம். அதற்கமைய, மருந்து விலைகளும் அதிகரிக்கக்கூடும். இதுகுறித்து நாம் ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம். நாம் பெரும்பாலான மருந்துகளை இறக்குமதி செய்கிறோம். அனைத்து மருந்துகளின் விலைகளும் அதிகரிக்காது, எனினும் சில குறிப்பிட்ட மருந்துகளின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படும் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 05.06.2026 | தினம் வெள்ளிக்கிழமை | வெற்றி வாரம் 0917 |
| ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கம் 8 0 1 4 9 4 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி 05.06.2026 | தினம் வெள்ளிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 3183 | ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கம் 25 28 52 72 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 05.06.2026 | தினம் வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கம் 12 20 45 73 | வெற்றி வாரம் 5344 |

| SASIRI | |
|---|---|
| திகதி 05.06.2026 | தினம் வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் 1013 | வெற்றி இலக்கம் 05 23 35 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 05.06.2026 | தினம் வெள்ளிக்கிழமை | |
| கடகம் | வெற்றி இலக்கம் 07 27 28 34 | சீட்டிழுப்பு வாரம் 4895 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 05.06.2026 | தினம் வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து G | சுப்பர் இலக்கம் 26 | வெற்றி இலக்கம் 39 56 63 70 | வெற்றி வாரம் 2359 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 05.06.2026 | தினம் வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கம் 06 09 38 70 | வெற்றி வாரம் 3009 |

## கோப்பிச் செய்கைக்கு காப்புறுதித் திட்டம்!

கொழும்பு, ஜூன் 6

கோப்பிச் செய்கைக்குக் காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த விவசாய, கமநலசேவைகள் காப்புறுதிச்சபை திட்டமிட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் அதிக நன்மதிப்பைப் பெற்ற கோப்பி இனங்களை நாட்டில் உற்பத்தி செய்வதுடன் அதனைப் பரவலாக்கும் வகையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பரிந்துரையைப் படி, கோப்பி உற்பத்தி செய்யப்படும் போதே காப்பீடு செய்யும் வழி வகைகள் அறிமுகப்படுத்தப்படும். கோப்பிச் செடிகளை நட்ட பிறகு, முதல் மூன்று ஆண்டுகளுக்கு காப்பீட்டுத் தொகையில் ஏழு சதவீதம் வழங்கப்படும். அதன்படி, முதல் ஆண்டுக்கு ரூ. 5 இலட்சத்து 10ஆயிரம் ரூபாவும், இரண்டாம் ஆண்டுக்கு ரூ. 6 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் மற்றும் மூன்றாம் ஆண்டுக்கு ரூ. 8 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் உச்ச காப்பீட்டுத் தொகையாகக் கொண்டு அதன் 7 வீதத்தை செலுத்தவேண்டும் எனக் காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது. கோப்பி உற்பத்தியின் போது ஏற்படும் வறட்சி, வெள்ளம், காட்டு யானைகளால் ஏற்படும் சேதம், கட்டுப்படுத்தமுடியாத தாவர நோய்கள், பூச்சித் தொல்லைகள் மற்றும் பிற விலங்குகளால் ஏற்படும் சேதங்கள் போன்றவற்றுக்காக இந்தத் திட்டத்தின்கீழ் காப்பீடு செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அதிபர் சேவையின் தரம் IIIக்கு போட்டிப்பரீட்சை ஞாயிறன்று!

கொழும்பு, ஜூன் 6

2025ஆம் ஆண்டுக்கான இலங்கை அதிபர் சேவையின் தரம் III க்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 7ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. இதற்கான அனுமதிப் பத்திரங்களை திணைக்கள இணையத்தளத்தின் ஊடாக ஒன்லைன் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும் எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்கு முன்னர் இந்தப் பரீட்சை ஏப்ரல்மாதம் 26ஆம் திகதி நடத்தப்படவிருந்தபோதிலும், தவிர்க்க முடியாத காரணத்தினால் அதனைத் திகதிகுறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. (ச-இ)



## தங்கநகைக் கொள்ளை சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜூன் 6

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற தங்கநகைக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற மற்றுமொரு தங்கநகைக் கொள்ளைச் சம்பவத்துடனும் இவர்களுக்குத் தொடர்பு உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. சந்தேகநபர்களால் கொள்ளையடிக்கப்பட்ட 12 தங்கமோதிரங்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர். நீர்கொழும்பு பகுதியில் தங்கநகைகளைக் கொள்ளையடிப்பதற்காகச் சந்தேகநபர்கள் பயன்படுத்தி வந்த மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர்களினால் திருடப்பட்ட ஏனைய தங்க நகைகளை மீட்பதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-இ)

## பராமரிப்பு நிலையங்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் விதிப்பு

கொழும்பு, ஜூன் 6

உரிய தரநிலைகளுக்கு அமைய பராமரிக்கப்படாத முதியோர் இல்லங்கள் மற்றும் பராமரிப்பு நிலையங்களுக்கு எதிராக எதிர்காலத்தில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முதியோர் பராமரிப்பு நிலையங் களை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான விதிமுறைகள் தற்போது தயாரிக்கப்பட்டு நிறைவுசெய்யப்பட்டுள்ளது. அதற்கான அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது. மாகாண சபைகளுடன் கலந்துரையாடி உடன்பாட்டை எட்டிய பின்னர், இந்த விதிமுறைகள் வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளன. பதிவுசெய்யப்படாத அல்லது சட்டவிரோதமான இடங்களில் முதியோர்களை தங்கவைப்பதைத் தவிர்க்குமாறு பாதுகாவலர்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம். தரமற்ற நிறுவனங்களை எதிர்காலத்தில் நடத்துவதற்கு அனுமதிக்கப்போவதில்லை. அதுதொடர்பில் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நாணயத்தாள்கள் அச்சிடப்படவில்லை

## ஜீ.ஜ.லக்மாலி எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 6**

**மத்திய வங்கிச் சட்டத்தின்கீழ் மத்திய வங்கி, நாணயத்தாள்களை அச்சிட்டு அரசாங்கத்தின் வரவு- செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்வது சட்டத்தின்படி முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளதால் அரசாங்கம் அவ்வாறான செயலை ஒருபோதும் செய்யவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.ஜ.லக்மாலி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது- நாட்டின் அதிகளவான இறக்குமதிச் செலவை ஏற்படுத்தும் எரிபொருள் பயன்பாட்டைக் குறைப்பதற்கான விதிமுறை களும் அரச கொள்கைகளுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன. இந்தக் கட்டுப்பாடுகளைச் சரியாகப் பேணாவிட்டால் பணவீக்கம் 7 சதவீதம்வரை உயரக்கூடும் என்று மத்திய வங்கி எச்சரிக்கை விடுத்தபோதிலும் தற்போதைக்கு நாடு அத்தகைய நிலையை அடையவில்லை. அரசாங்கம் இலாபம் அடைவதற்காகவோ அல்லதுகடன்வாங்குவதற்காகவோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாணயத்தாள்களை அச்சிடவில்லை - என்றார். (ச-இ)

# பிக்குகளுக்கு அச்சுறுத்தல் புத்தசாசனம் குலையுமாம்

## கூறுகிறார் சம்பிக்க



கொழும்பு, ஜூன் 6

பிக்குகள் மற்றும் புத்தசாசனத்தை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் விமர்சனங்களால் பிக்குகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஒரு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு புத்தசாசனத்தை அவமதிக்கும் செயற்பாடுகளுக்கு இடமளிக்கமுடியாது என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது- புத்தசாசனத்தையும், பிக்குகளையும் அவமதிக்கும் வகையில் திட்டமிட்ட வகையில் செயற்பாடுகள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது. பல்லேகல ஹேமரத்ன தேரர் விவகாரத்தை தொடர்ந்து இந்தச் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. புத்தசாசனம் இல்லாதொழிந்தால் இந்த இராச்சியம் மிக மோசமாகப் பாதிக்கப்படும்- என்றார். (ச-இ)

# மாட்டு வண்டில்களுக்கு மாறப்போகும் மக்கள்!

## சீலரத்ன தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 6

தற்போதைய அரசாங்கம் நாட்டு மக்களை அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றத்தினாலும், தவறான பொருளாதார முகாமைத்துவத்தினாலும் மிக மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது. எரிபொருள் விலை தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருவதால், சாதாரண மக்கள் எதிர்காலத்தில் மாட்டுவண்டில்களில் பயணிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என ஜனசெத பெரமுனக் கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு மக்களுக்கு நிவாரணம் வழங்க விருப்பமுமில்லை, அதற்கான எண்ணமும் கிடையாது. டித்வா போன்ற இயற்கை அனர்த்தங்களை நாட்டு மக்கள் சந்தித்த வேளைகளில், அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக்கூட இந்த அரசாங்கம் செய்துகொடுக்கவில்லை. மலசலகூடங்களுக்குச் சென்று அடிக்கல் நாட்டுவதை நிறுத்திவிட்டு, நாட்டைப் பொருளாதார ரீதியாகக் கட்டியெழுப்ப முடியாவிட்டால், தயவுசெய்து பதவி விலகிச் செல்லுங்கள் - என்றார். (ச-இ)

# மத்திய வங்கிக்கு எதிராக சவப்பெட்டிப் போராட்டம்!

கொழும்பு, ஜூன் 6



மத்திய வங்கியின்கீழ் இயங்கும் நிதி நிறுவனங்களின் ஊழல் மற்றும் மோசடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், தமது வாழ்வாதாரத்தை மீட்டுத் தருமாறுகோரி, சவப்பெட்டியைச் சுமந்து ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் போராட்டமொன்றை முன்னெடுத்தனர். மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவின் கண்காணிப்புச் செயற்பாடுகள் மீதான கடும் அதிருப்தியை வெளியிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள். ஜனாதிபதியை நேரில் சந்தித்துத் தீர்வு காணும் வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளனர். ஆர்ப்பாட்டத்தின் போது, பொலிஸார் மக்களைத் தடுப்பதற்கு முற்பட்டபோது இரு தரப்பினருக்கும் இடையே கடும் வாக்குவாதமும் ஏற்பட்டது. ஜனாதிபதி செயலகத்தைச் சுற்றியுள்ள பகுதியில் பொலிஸார் மற்றும் கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. பொலிஸாரின் கடுமையான எச்சரிக்கைகளை அடுத்து போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (ச-இ)




# உங்களுக்கும் இப்பிடித்தான்...!

ஹொரணவில இருந்த முதியோர் இல்லத்தில தீ விபத்து நடந்து கொஞ்சப்பேர் செத்தவையெல்லோ, அந்த விபத்து நடக்கேக்க, அங்க இந்தவையில ஏழு பேரை ஆறு அடி நீளமான 'சங்கிலியால' கால் கையைக் கட்டி வைச்சிருந்தவையாம். அவைக்கு மனநலம் சரியில்லை எண்ட காரணத்தைச் சொல்லி இப்பிடி மிருகங்கள்மாதிரி அவையைப் பூட்டி வைச்சிருந்திருக்கினம். தீப்பிடிச்ச நேரத்தில தப்பியோடக் கூட ஏலாம, அந்தச் சங்கிலிக்குள்ளேயே அவையள் துடி துடிச்சு செத்திருக்கினம். அதைவிட சிலர் மனநலம் சரியில்லாததால நெருப்புக்க இருந்து காப்பாத்தி வெளியால கொண்டந்து விட்ட பிறகு திரும்ப நெருப்புக்க ஓடிப்போயிருக்கினம். அதால தான் சாவு எண்ணிக்கை கூடினதாம். இப்ப அந்த இல்லத்தை நடத்தின இசுரு அனுஷ்க எண்டவரை விளக்கமறியலில வைச்சிருக்கினம்.

ஒரு வயசான ஆளைப் பராமரிக்க மாசம் 35 ஆயிரத்தை அவையின்ர பிள்ளையள் குடுத்திருக்கினம். ஆனா, அந்த இல்லத்தை நடத்தினவர் தன்ர லாபத்துக் காண்டி, கொஞ்ச ஆக்களைத்தான் வேலைக்கு வைச்சிருந்தவராம். அதால 'அவைக்கு ஒழுங்கான பராமரிப்பும் இல்லையாம். அதைவிட ஆடுமாடுகள் மாதிரி கட்டிவைச்சிருந்தவர்' எண்டெல்லாம் அங்க தங்கியிருந்த வயசான ஆக்களின்ர பிள்ளையள் எல்லாரும் இல்லத்தை நடத்தினவரில குற்றம் சாட்டிப் புலம்புகினம். ஆனால் இந்தச் சம்பவத்தில அந்த இல்லத்தை நடத்தினவர் மட்டும் குற்றவாளி இல்லை. தங்கட சொகுசுக்கும் வசதிக்கும் தங்களைப் பெத்தவை இடையூறா இருப்பினம் எண்டு நினைச்சு, காசைக் குடுத்து இப்பிடியான தரங்கெட்ட இல்லங்கள் எண்டு தெரிஞ்சும் அங்க கொண்டுபோய் தள்ளிவிட்ட அந்தப் பிள்ளையளும் குற்றவாளிகள் தான்! தங்கடை பெற்றாரைச் சங்கிலியால கட்டி வைச்சிருக்கிறது முதலே தெரிஞ்சிருந்தும், ஏன் அவையள் அங்கேயே தொடர்ந்தும் இருக்கவிட்டவை? முதலே வெளியில இதைச் சொல்லியிருந்தால் இந்த விபத்து நடக்க முன்னமே அவையைக் காப்பாத்தியிருக்கலாமே?

இஞ்ச எங்கட யாழ்ப்பாணத்திலயும் அரியாலைக்குக் கிட்ட இருக்கிற ஒரு முதியோர் பராமரிப்பு நிலையத்தில கிட்டடியில ஒரு பெரிய கூத்து நடந்தது. அந்த இல்லத்தை நடத்தின டாக்குத்தருக்கும் வேலை செய்த ஆக்களுக்கும் இடையில ஏதோ சம்பளப் பிரச்சினையாம். வேலை செய்தவை சொல்லாமல் கொள்ளாமல் நிண்டிட்டினம். அதால அந்த நிலையத்தில இருந்தவையை பராமரிக்க ஆக்களில்லாமல், அவை அந்தரப்பட்டவை. கனபேருக்கு ஒழுங்கான பராமரிப்பு இல்லாமல் படுக்கைப் புண்ணும் வந்திட்டு. பிறகு விசயம் எல்லாருக்கும் தெரிஞ்சதும் வெளியால இருந்து ஆக்களை கூட்டியந்து அவையை 'கிளீன்' பண்ணி, நிலைமையை தற்காலிமாக அந்த டாக்குத்தர் சமாளிச்சவராம். ஆனால் இன்னும் நிலைமை சரிவரேலை. இப்பிடி எல்லா முதி யோர் பராமரிப்பு இல்லங்களிலையும் ஒழுங்கான கவ னிப்பு இல்லை. ஆனால் காசை மட்டும் வாங்கிப்போடு வினம். உங்கட வசதிக்காண்டிப் பெத்தவையை ஏலாக் காலத்தில முதியோர் இல்லங்களில கொண்டு போய் தள்ளிவிடுற இந்தத் 'தரங்கெட்ட' கலாசாரத்தை இப்ப வாவது நிப்பாட்டுங்கோ! இல்லாட்டி நாளைக்கு உங்கட பிள்ளையளும் இதே மாதிரி இல்லத்தில விட, அவங் கள் உங்களை இதே சங்கிலியால தான் கட்டுவாங்கள் எண்டதையும் மறக்காதையுங்கோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முல்லைப் பேருந்து நிலையத்தின் புனரமைப்பைத் துரிதப்படுத்துக

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை



முல்லைத்தீவு, ஜுன் 6

முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலையத்தின் கட்டுமானப்பணிகளை விரைவாக முழுமைப்படுத்தி, மக்கள் பாவனைக்காகக் கையளிக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்தார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இந்தப் பேருந்து நிலையத்தின் நிர்மாணப்பணிகள் நீண்டகாலமாகத் தொடர்கின்றன. குறிப்பாக சுமார் 7 வருடங்களாக பேருந்து நிலையத்தின் நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. எனினும் இதுவரை குறித்த பேருந்து நிலையத்தின் நிர்மாணப்பணிகள் முடிவுறுத்தப்படவில்லை. எனவே பேருந்து நிலையத்தின் நிர்மாணப்பணிகளை விரைவாக முடிவுறுத்தி மக்கள் பாவனைக்குக் கையளிக்கவேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார். இதற்குப் பதிலளித்த முல்லைத்தீவு மாவட்டச் செயலர், பேருந்துநிலையத்தை அமைப்பதற்குரிய திட்டமிடல்கள் 2017 ஆம் ஆண்டுக் காலப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டன. தொடர்ந்து 2020ஆம் ஆண்டு குறித்த மத்திய பேருந்து நிலையத்தை அமைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் கொரோனாத் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பேருந்து நிலையத்தை அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. தற்போது பேருந்து நிலையத்தை அமைப்பதற்குரிய நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு, கட்டுமானப்பணிகள் இடம்பெற்றுவருகின்றன. எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 14ஆம் திகதியுடன் முழுமைப்படுத்தப்படும்-என்றார். (க-246)

## விண்ணப்பம் கோரல்

வவுனியா, ஜுன் 6

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் 2026 ஜுலை ஆரம்பிக்கப்படவுள்ள கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கணினி வடிவமைப்பாளர், கள உதவியாளர் விவசாயம், மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பவியலாளர், நீர்க்குழாய் பொருத்துநர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் ஆகிய கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை அலுவலக நேரத்தில் அல்லது www.DTET.GOV.LK எனும் இணையத்தள முகவரியூடாக பெற்றுக் கொள்ளலாம். இக்கற்கைநெறிகளுக்கான சலுகைகளாக மாணவர் ஊக்குவிப்புக் கொடுப்பனவு (ரூபா 4000 தொடக்கம் ரூபா 5000 வரை), போக்குவரத்துக்கான சீசன் ரிக்கற், சர்வதேச தர சான்றிதழ்(என்.வி.க்யூ.), இலகுவான உடனடியான தொழில்வாய்ப்பு(உள்ளூர் மற்றும் வெளிநாடு) போன்றவற்றைப் பெறலாம். மேலதிக தொடர்புகளுக்கு 024 222, 3664 024 205 0177, 024 222 6720 ஆகிய தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

## கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜுன் 6

அளவெட்டி சைவ வாலிப சங்கத்தின் ஏற்பாட்டில் 2025 ஆம் ஆண்டில் உயர்தரப்பெறுபேறு பெற்ற உயர்தர மாணவர்கள் கௌரவிப்பு மற்றும் சமயப்பணியாளர் கௌரவிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அளவெட்டி கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் நடைபெறும். சங்கத் தலைவர் வ.நல்லதம்பி தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட சட்ட மருத்துவ அதிகாரி உருத்திராபசுபதி மயூரதன் கலந்துகொள்வார். (க)

## செம்புலக்குரிசில் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜுன் 6

வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவையால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைக்காக வழங்கப்படும் செம்புலக்குரிசில் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கவிதை, சிறுகதை, நாவல், நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், குறும்படம், இசைநாடகம், இசை (வாய்ப்பாட்டிசை, பண்ணிசை, இசையமைப்பு), வாத்தியக் கலைகள் (தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோனியம், பறை), கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்துநடை), கிராமியக் கலைகள் (கரகம், காவடி, ஒயிலாட்டம், கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், மகுடி போன்ற தொடர்புடைய கலைகள்), இசைக்கலை (வாய்ப்பாட்டு, பண்ணிசை, இசையமைப்பு), ஒப்பனைக்கலை (நாடகங்கள், கூத்துகள், நடனக்கலைத் துறைகளுக்கானவை), வாத்தியங்கள் உருவாக்கம் ஆகிய துறைகளில், வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகப்பிரிவில் கலைப்பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கு 60 வயதைப் பூர்த்தியடைந்தவர்களும், இதுவரை இந்த விருதைப்பெற்றுக்கொள்ளாதவர்களும் விண்ணப்பிக்கமுடியும். விண்ணப்பப் படிவங்களை வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று, பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறைப் பணியை சான்றுப்படுத்தும் ஆவணப் பிரதிகளையும் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (க)



இராணுவத்தின் 54ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில், மன்னார் கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 301 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. மன்னார் குடும்பநலப் பணியகத்தில் இடம்பெற்ற நிகழ்வில், வன்னி பாதுகாப்புப் படையணி கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் குலதுங்க, இராணுவத்தின் 54ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் வை.எம்.என். பெரேரா, மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையின் அத்தியட்சகர் மருத்துவர் ஆசாத் எம்.ஹனிபா ஆகியோர் கலந்துகொண்டனர். (க-56)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டுநீங்கும். உறவினர்கள்வகையில்தேவையற்ற பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். தேவையான பணம் கிடைக்கும். உறவினர்கள் சிலர் உங்கள் யோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால்,குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். அனுசரித்துச் செல்வது நல்லது.

**கடகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் கூடிவரும். பொறுமை அவசியம்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாகமுடியும். உற்சாகமாகச் செயற்படுவீர்கள். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். அரசாங்கக் காரியம் அனுகூலமாகமுடியும்.

**விருச்சிகம்:** காலையில் வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மகரம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தடைகளும் தாமதமும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** உற்சாகமான நாள். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் பணியாளர்களால் வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை





## பாடினாலும் குற்றம்?

தாயக எழுச்சிப் பாடலொன்றை தானே எழுதிப் பாடி, தனது இணையத்தளத்தில் பதிவிட்டதற்காக, கிளிநொச்சியைச் சேர்ந்த சொல்லிசைப் பாடகர் சங்கீதன் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தக் கைது நடவடிக்கை ஒருதலைப்பட்சமானதாகவும்,சிங்கள இனவாதிகளைத் திருப்திப்படுத்துவதை யுமே நோக்காகக் கொண்டுள்ளது.

குறித்த பாடகரின் பாடலில் வரும் 'வேங்கை', 'சிங்கம்' 'புலிக்கொடி' போன்ற சொற்கள் இலங்கையில்பயன்படுத்தப்படும் பொதுவான சொற்களே தவிர, எந்தவொரு சட்டத்தின் கீழும் தடைசெய்யப்பட்டவை அல்ல. அதேபோல, 'தமிழீழம்' என்பது ஒரு புவியியல் அடையாளமும் அரசியல் அபிலாஷையுமே ஆகும். தமிழீழம் என்பதை தமது பெயரின் முன்னொட்டாகக் கொண்ட தமிழ்க்கட்சிகள் பல இன்றும் இயங்கி வருகின்றன,தேர்தலில் போட்டியிருகின்றன, நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அந்தக்கட்சிகள் கொண்டுள்ளன. அவ்வளவு ஏன், 'தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள்' என்ற பெயரோடு இயங்கும் பிள்ளையானின் கட்சியைத்தான் இதுநாள்வரை அதிகார இயந்திரங்கள் போற்றி போசித்து தமது கைப்பிள்ளையாக வைத்திருந்தன. அப்படியானால் முதலில் பிள்ளையானின் கட்சியையுமல்லவா பயங்கரவாதத்தை ஊக்குவிக்கின்றது என தடை செய்து, அந்தக் கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரையும் சிறைக்குள் தள்ளியிருக்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லையே. இங்குதான் தற்போதைய 'திசைகாட்டி' அரசாங்கத்தின் உண்மையான பேரினவாத முகம் அம்பலமாகிறது. தமிழ் மக்களின் கலை மற்றும் கருத்து வெளிப்பாட்டு உரிமையை நசுக்குவதில் குறியாக இருக்கும் இந்த அரசு, தெற்கில் உள்ள சிங்கள இனவாத அரசியல்வாதிகளான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, சரத் வீரசேகர போன்றோரும், ஞானசார தேரர் போன்ற பிக்குகளும் சிறுபான்மை மக்களுக்கு எதிராக, இனங்களுக்கிடையே பகிரங்கமாகக் குரோதத்தை ஏற்படுத்தும் கருத்துகளைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தாலும் அவற்றைக் கண்டுகொள்வதே இல்லை. பேரினவாதக் கருத்துகளைப் பரப்புபவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து சுதந்திரமாக உலா வர அனுமதிக்கப்படும் அதேவேளை, ஒரு தமிழ்க் கலைஞன் தன் உணர்வைச் சொல்லிசைப் பாடலாகப் பாடினால் உடனடியாகப் பயங்கரவாத முத்திரை குத்தப்படுவது, 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்ற கோட்பாட்டை அப்பட்டமாக மீறும் செயலாகும்.

புதியதொரு மாற்றத்தைக் கொண்டுவரப் போவதாகக்கூறி ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருக்கும் இந்த அரசாங்கமும், தனக்கு முந்தைய ஆட்சியாளர்களைப் போலவே பழைய பேரினவாத மகாவம்சச் சிந்தனையையும், அதன் மேலாதிக்கத்தையுமே மறைமுகமாக ஊக்குவித்து வருகின்றது. எதனை எழுதவேண்டும், எதைப் பாடவேண்டும் என்பதை அரசாங்கமும் காவல்துறையும்தான் தீர்மானிக்கும் என்ற இத்தகைய சர்வதிகாரப்போக்கு ஜனநாயகத்தின் தூண்களைப் பலவீனப்படுத்துகின்றது. கிளிநொச்சியில் இன்று நடைபெறவுள்ள மக்கள் போராட்டம் என்பது வெறும் ஒரு பாடகருக்கான ஆதரவு மட்டுமல்ல; அது தமிழ் மக்களின் அடிப்படைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான அறக்குரல். ஜனநாயக விழுமியங்களைக் காக்கவேண்டுமாயின், இந்த அரசாங்கம் தனது பாரபட்சமான அடக்குமுறைகளை உடனடியாக நிறுத்தி, படைப்புச் சுதந்திரத்தை எவ்வித அச்சமுமின்றி நிலைநிறுத்த முன்வரவேண்டும். இல்லையேல், இந்தத் திசைகாட்டியும் சர்வதிகாரப் பாதையிலேயே நாட்டை வழிநடத்துகிறது என்பது திண்ணம்.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

### பொய்யாமொழி

**மறப்பினும் ஓதிக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்**

**பொருள்:** கற்ற மறைப்பொருளை மறந்தாலும் மீண்டும் அதனை ஓதிக் கற்றுக் கொள்ள முடியும்; ஆனால் மறை ஓதுவானுடைய குடிப்பிறப்பு, ஒழுக்கம் குன்றினால் கெடும்.




## இணைய மோசடிகள் தொடர்ந்தால் இலங்கையின் பெயருக்கு ஆபத்து!

*எச்சரிக்கின்றது சீனா*


கொழும்பு, ஜூன் 6

**இலங்கையில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் இணையத்தள சூதாட்டம் மற்றும் தொலைத்தொடர்பு மோசடிகளைக் கட்டுப்படுத்த, இலங்கை மற்றும் சீன அரசாங்கங்கள் இணைந்து நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன.**

சர்வதேச ரீதியாக உருவெடுத்துள்ள இத்தகைய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள், இலங்கையின் சர்வதேச நற்பெயருக்கும், நிதி நிலைத்தன்மைக்கும், பொதுப் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்று இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் எச்சரித்துள்ளது.

இதுவரை இலங்கைப் பொலிஸார் மேற்கொண்ட பல சோதனைகளில், சூதாட்டம் மற்றும் மோசடி மையங்கள் முற்றுகையிடப்பட்டு, பல வெளிநாட்டுச் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட சீனக் குடிமக்களும் அடங்குவர், அவர்கள் சட்டப்படி சீனாவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சீன அரசாங்கம் தனது வெளிநாட்டு முதலீட்டு மற்றும் குடிமக்கள் தொடர்பான கடுமையான கட்டுப்பாடுகளை வலியுறுத்தியுள்ளதுடன், இத்தகைய குற்றவலையமைப்புகளை முற்றாக ஒழிக்க இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து சர்வதேச அளவில் ஒத்துழைப்பை வலுப்படுத்தத் தீர்மானித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## சிகரெட்டுகளுடன் சீனர்கள் கைது!

கொழும்பு, ஜூன் 6

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குக் கடத்திவந்த, 45 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுச் சிகரெட் தொகையுடன் இரண்டு வெளிநாட்டுப் பயணிகள் நேற்று வெள்ளிக்கிழமை கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் 29 மற்றும் 42 வயதுகளையுடைய சீன நாட்டவர்கள் எனவும், அவர்கள் இருவரும் வியாபாரிகள் எனவும் தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்ட சீன வியாபாரிகளைக் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் தடுத்து வைத்து, விசாரணை மேற்கொண்டு வருகின்றன. (ச-இ)

## கொள்ளையர் கைது

கொழும்பு, ஜூன் 6

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற தங்க நகைக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு தங்க நகைக் கொள்ளைச் சம்பவத்துடனும் இவர்களுக்கு தொடர்பு இருப்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கொள்ளையிடப்பட்ட 12 தங்க மோதிரங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், குற்றத்திற்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 6

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியான வீழ்ச்சியை நேற்றும் பதிவு செய்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி, அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 332.27 ரூபாவாக நேற்றுக் காணப்பட்டது. விற்பனை விலை 342 ரூபாவாகக் காணப்பட்டது. (எ-இ)




## பல்பொருள் கடைக்கு ரூ.20 ஆயிரம் தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

நெல்லியடி சுகாதாரப் பரிசோதகர் பிரிவில், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத பல்பொருள் விற்பனை நிலையத்துக்கு,20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. சுகாதாரப் பரிசோதகரால் கடந்த 24 ஆம் திகதி நெல்லியடி பகுதியில் இயங்கும் குறித்த விற்பனை நிலையம் பரிசோதிக்கப்பட்டது. இதன்போது பொருள்களுடன் எலிஎச்சங்களும், நிலம் அழுக்காகவும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இதனையடுத்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, இருகுற்றங்களுக்கும் 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (சு-422)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# முல்லைத்தீவில் 164 திட்டங்களுக்கு 357 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

முல்லைத்தீவு,ஜூன் 6

**சமூக அபிவிருத்திச் சபையால் இனங்காணப்பட்ட உற்பத்திப் பொருளாதாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுத்திட்டத்தில், முல்லைத் தீவு மாவட்டத்தில் 136 கிராம அலுவலர் பிரிவுகளில், 164 திட்டங்களுக்கு 357 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

அதற்கமைவாக கிராமப்புற மக்களின் வறுமையை ஒழிக்கும் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 'பிரஜா சக்தி ஆயிரம் கிராமங்களில் ஆயிரம் வேலைத்திட்டங்கள்' எனும் தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்பநிகழ்வு, முள்ளிவாய்க்கால் கிராம அலுவலர் பிரிவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இதன் முதலாவது திட்டமாக, இரண்டு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள தானியங்களை உலர்த்தும் நிலையத்துக்கு, கூட்டுறவு அபிவிருத்திப் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டது.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் ஏ. உமாமகேஸ்வரன், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் ஆர். விஜய்குமார், மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், தேசிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர், கரைதுறைபற்றுப் பிரதேசசபை உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட, பிரதேச செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். (க-19)

## ஒழுங்குமுறையற்றுச் சம்பளம் இ.போ.ச. ஊழியர்கள் விசனம்

வவுனியா, ஜூன் 6

இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை ஊழியர்களுக்கான, சம்பளக் கொடுப்பனவு ஒழுங்குமுறையற்று வழங்கப்படுகின்றது என்று ஊழியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா சாலையில் கடமையாற்றும் அதிகாரிகள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கான மே மாதச்சம்பளம் கடந்த மே மாதம் 26 ஆம் திகதி வழங்கப்பட்டிருக்கவேண்டும். இருப்பினும், வழக்கமான திகதி கடந்து பல நாள்கள் ஆகியும், இன்று வரை அவர்களுக்கான சம்பளம் வழங்கப்படவில்லை.

அலுவலக ஊழியர்கள் மட்டுமன்றி, வீதிகளில் களமிறங்கிப் பணியாற்றும் சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த பொறியியலாளர்கள் ஆகியோரும் இந்தப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர். இதனால் அன்றாட வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். எனவே, உரிய அதிகாரிகள் தலையிட்டு சம்பளத்தை உரிய திகதியில் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-110)

# ஆயிரம் கிராமங்கள் வேலைத்திட்டத்தில் பால் சேகரிப்பு நிலையத்துக்கு அடிக்கல்

மன்னார்,ஜூன் 6

தேசிய வறுமை ஒழிப்பு வேலைத்திட்டமான பிரஜா சக்தி திட்டத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படும் 'ஆயிரம் கிராமங்களுக்கு ஆயிரம் வேலைத்திட்டங்கள்' திட்டத்தின்கீழ், மன்னார் மாவட்டத்துக்கான ஆரம்ப நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்தத் திட்டத்தின்கீழ் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவில், பாளைக்குளி கிராமத்தில் பால் சேகரிப்பு நிலையத்துக்கு அடிக்கல் நடப்பட்டது. இந்தத் திட்டத்துக்கு 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன், பிரதேச செயலர்,மாவட்டச் செயலக ,பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், கிராம மட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். (க-56)





## நகுலேஸ்வரர் ஆலய வளாகத்தில் நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய வளாகத்தில், இந்திய அரசாங்கத்தின் விசேட நிதியுதவியின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட நீர்ச்சுத்திகரிப்பு நிலையம் நேற்றுத் திறக்கப்பட்டு, பொதுமக்களின் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது. நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தை, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ்ஜா உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். நிகழ்வில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ.ந.ரங்கநாதக் குருக்கள், யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, தூதரக அதிகாரிகள், ஆலயத் தொண்டர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க-66-20)



## வவுனியாவில் வெசாக் கொண்டாட்டம்

வவுனியா, ஜூன். 6

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் ஏற்பாட்டில், 'வடக்கு மாகாண வெசாக் உற்சவம்' வவுனியா. பரக்கும் மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. உற்சவத்தில், தர்ம போதனை, மிகப் பிரமாண்டமான வெசாக் ஊர்வலம் என்பன இடம்பெற்றன. தொடர்ந்து வெசாக் கூடுகளின் கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டது. இறுதியாக தானம் வழங்கல் (தன்சல்) மற்றும் மேடை நிகழ்வுகள் இடம்பெற்றன. (க-113)

## சட்டத்தைக் காட்டி நழுவிச் செல்லாது மாகாணத் தேர்தலை நடத்தவேண்டும்

### ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 6

மாகாணசபைத் தேர்தலென்பது மக்களின் ஜனநாயக உரிமையாகும். எனவே, சட்டங்கள் மீது பழிவை சுமத்திவிட்டு அரசாங்கம் நழுவக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளதாவது- மாகாணசபைத் தேர்தல் தற்போது நடத்தப்படவேண்டும். அதைச் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்தை நாம் வலியுறுத்துகின்றோம். சட்டம் மீது பழியைச் சுமத்தி விட்டு தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. அதை ஏற்கமுடியாது. தேர்தலென்பது மக்களின் ஜனநாயக உரிமையாகும். அந்த உரிமை பாதுகாக்கப்படளவேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணைந்தே மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்ள எதிர்பார்க்கின்றன- என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருப்பெயர்ச்சி பலன்கள் 2026



குருபகவான், ஜூன் 2 முதல் உங்கள் ராசிக்கு 11ஆம் இடத்தில் வந்து அமர்ந்து பலன் தரப்போகிறார். இது வரையிலும் 'என்னடா இது வாழ்க்கை' என ஒருவித வெறுமையும், அலைச்சலையும் கொடுத்து வந்த குருப கவான், இப்போது லாபஸ்தானத்தில் வந்து அமர்வதால், தொட்டது துலங்கும். நம்மால் எதுவும் முடியும் என்ற தன்னம் பிக்கையும், தைரியமும் பிறக்கும். குடும்ப வருமானம் உயரும். அதிக வட்டிக்கடனை இனி பைசல் செய்வீர்கள். எதிர்காலத்துக் காக சேமிக்கத் தொடங்குவீர்கள். பிள்ளைகளின் பேச்சில் முதிர்ச்சி தெரியும். மகளுக்கு எதிர்பார்த்த இடத்திலேயே வரன் அமையும்.




**விழிகள் இல்லையென்றால் பார்வையில்லை, வலிகள் இல்லை என்றால் வாழ்க்கை இல்லை என்பதை உணர்ந்து வலிகளை வழிகளாக மாற்றிப் போராடும் கன்னி ராசிக்காரர்களே!**

வெளியிடங்களில் முதல் மரியாதை கிடைக்கும். வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவீர்கள். சகோதர, சகோ தரிகள் வகையில் இருந்துவந்த மனக்கசப்புகள் விலகும். அவர்களால் ஆதாயம் உண்டு. பார்த்தும் பார்க்காதது போல், விலகிச்சென்ற சொந்த பந்தங் கள் எல்லாம் வலிய வந்து உறவாடுவார்கள். அரசுக் காரியங்கள் விரைந்து முடியும். ஆரோக்கியம் சிறப் பாக இருக்கும்.

**குருபகவானின் பார்வைப் பலன்கள்:**
உங்களின் 3ஆம் வீட்டை குரு பார்ப்பதால், தடைகள் விலகும். முகப்பொலிவு கூடும். வீட்டில் சந்தோஷம் நிறைந்திருக்கும். இளைய சகோதரர் வகையில் உத விகள் கிடைக்கும். உங்களின் முன்னேற்றம் பலரை யும் வியக்க வைக்கும்.

குருபகவான் ஐந்தாம் இடத்தைப் பார்ப்பதால், குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகளுக்குத் தடைபட்டுக் கொண்டிருந்த திருமணம் சிறப்பாக முடி யும். தந்தைவழிச் சொத்துகளைக் கேட்டு வாங்குவீர் கள். வழக்குகள் சாதகமாக அமையும். உங்கள் ராசிக்கு 7ஆம் வீட்டை குரு பார்ப்பதால், எதிர்பார்த்த வகையில் பணம் வரும். கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும்.

குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்: உங்களின் சுக சப்தமாதிபதியுமான குருப கவான் தனது நட்சத்திரத் தில் 02.06.26 முதல் 18.06.26 வரை பயணம் செய்வதால் மனப் போராட்டம் ஓயும். வீடு கட்ட வங்கி லோன் கிடைக்கும். சிலர் வீடு மாறுவீர்கள்.

**பொருளாதார நிலை உயரும், புதிய சொத்துகள் வாங்கும் யோகம் மற்றும் குடும்பத்தில் சுபிட்சம் உண்டாகும்**

யோகாதிபதியான சனிபகவானின் நட்சத்திரத்தில் 18.06.26 முதல் 19.08.26 வரை குருபகவான் பயணம் செய்வதால் தள்ளிப்போன திருமணம் கூடி வரும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் தீர்வுக்கு வரும்.

உங்களின் ராசிநாதனான புதனின் நட்சத்திரத்தில் 19.08.26 முதல் 31.10.26 வரை மற்றும் 25.01.27 முதல் 26.06.27 வரை குருபகவான் பயணம் செய் வதால் பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். கேதுவின் நட்சத்திரத்தில் 31.10.26 முதல் 25.01.27 வரை குருபகவான் செல்வதால் பிரபலங்களின் உதவி கிடைக்கும்.

வியாபாரத்தில், புதுப் புது சலுகைகளை அறிவித்து வாடிக்கையாளர்களைப் பெருக்குவீர்கள். சந்தை நிலைவரம் அறிந்து புதிய முதலீடுகள் செய்வீர்கள். புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உணவு, இரும்பு, புரோக்கரேஜ் வகைகளால் ஆதாயம் உண்டு. கடையை விசாலமான இடத்துக்கு மாற்று வீர்கள். கூட்டுத்தொழிலில் பங்குதாரர்களுடனான மனத்தாங்கல் விலகும். வேலையாட்களின் ஆதரவு உண்டு.

உத்தியோகத்தில் தலைமைப் பொறுப்பு தேடி வரும். தள்ளிப் போன பதவி உயர்வு, சம்பள உயர்வு தடையின்றி கிடைக்கும். மேலதிகாரி உங்களை புரிந்து கொள்வார். கணினி துறையி னருக்கு வெளிநாட்டு நிறுவனங் களில் இருந்து அதிக சம்பளத்துடன் கூடிய அழைப்பு வரும். கலைத்துறையினருக்கு பரிசு கிடைக்கும். இந்த குருப்பெயர்ச்சி புதுச் சிந்தனையால் இலக்கை எட்டும் காலமாக அமையும்.

**குருபகவான் பரிகார தலங்கள்:**
திருவையாறில் இருந்து மேற்குத் திசையில் 15 கி.மீ . தொலைவில் குடமுருட்டி ஆற்றின் கரையில் உள்ள ஸ்ரீ அக்னீஸ்வரர் கோயில் தட்சிணாமூர்த்தியை வணங்குங்கள். கோயில் அன்னதானப் பணிக்கு உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள். எல்லாவகை யிலும் வெற்றியே தேடிவரும். இந்தக் குருப்பெயர்ச்சி சோதனையை உடைத்து சாதிக்கும் காலமாக அமை யும்.


# கலைஞர்களை ஒடுக்குவதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டம்!

## மக்கள் போராட்ட முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 6
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக ஒழிப்பதாகப் பகிரங்கமாக வாக்குறுதிய ளித்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், இன்று அதே சட் டத்தை மிகமோசமான முறையில் பயன் படுத்தி கலைஞர்கள் மற்றும் ஊடகவிய லாளர்களை அடக்கி ஒடுக்கும் நசுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. அர சாங்கத்தின் இந்தத் தார்மீகமற்ற இரட்டை வேட அரசியலும், இனவாதத் தைக் கிளறிவிட்டு அரசியல் இலாபம் தேடும் சதித்திட்டங்களும் நாட்டை மீண் டும் ஒரு அபாயகரமான நிலைக்குத் தள்ளும் என மக்கள் போராட்ட முன் னணி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மக்கள் போராட்ட முன்ன ணியின் ஒருங்கிணைப்பாளர் துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளதாவது-

கணேஷ்குமார் எனும் கலைஞர், ஒரு பாடலைப் பாடியமைக்காக பயங்கரவா தத் தடைச்சட்டத்தின் கீழ் அநியாயமாகக் கைதுசெய்யப்பட்டு, 14 நாள்கள் விளக் கமறிய லில் வைக்கப்பட்டுள்ளார். புலி கள் அமைப்பை மீளுருவாக்கம் செய்ய முற்பட்டதாகக்கூறி அவர் மீது சுமத்தப் பட்டுள்ள குற்றச்சாட்டு, ஒரு கலைஞ னைச் சிதைப்பதற்கான போலியான முத்திரையாகும். தங்கள் தேர்தல் பிரசா ரங்களின்போது, இதே போன்ற பாடல்க ளைப் பாடி, பிரபாகரன் மற்றும் ஈழம் குறித்துப் பேசியவர்களால் வாக்கு களைப் பெற்றுக்கொள்ள முடிந்ததென் றால், இன்று மற்றுமொரு சாதாரணக் கலைஞர் பாடும்போது அது பயங்கரவா தமாக மாறுவது எப்படி? இதுவே இந்த அரசாங்கத்தின் தார்மீகமற்ற இரட்டை வேடமாகும் - என்றார். (ச-இ)



# பிரதான வீதியால் பயணித்த வாகனங்கள் பரிசோதனை

கிளிநொச்சி, ஜூன் 6
ஏ35 பிரதான வீதியில் பயணித்த வாகனங்களின் தரம் தொடர்பில் நேற்று முன்தினம் திடீர்ப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினர் மற்றும் தருமபுரம் போக்குவரத் துப் பொலிஸார் இணைந்து பரிசோதனையை மேற்கொண்டனர்.

தற்பொழுது பாவனையில் உள்ள வாகனங்கள் பயன்பாட்டுக்கு ஏற்றதா என்பது தொடர்பில் பரிசோதிக்கப்பட்டது. அத்துடன் வாகனங்களில் மேலதிகமாக பொருத்தப்பட்டுள்ள உபகரணங்களை அகற்றுமாறு அவற்றின் உரிமையாளர் களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. சில வாகனங்களுக்குத் தண்டமும் விதிக்கப்பட்டது. (க-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ்.வாலிப கிறிஸ்தவ சங்கத்தின் நிறுவுநர் தினமும் கொடிவாரமும்

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்ப்பாண வாலிப கிறிஸ்தவ சங்கத்தின் (YMCA) நிறுவுநர் தினம் மற்றும் கொடி வார நிகழ்வுகள் இந்த வாரம் கடைப்பிடிக் கப்பட்டு வருகின்றன.

'இயற்கையைப் பாதுகாப்போம் - பொலித் தீன் பயன்பாட்டைத் தவிர்ப்போம்' என்ற கருப்பொருளில் யாழ். மாவட்டம் முழுவதும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத் தப்பட்டு வருகின்றது. கொடி வார நிகழ்வு களின் ஒரு பகுதியாக, வை.எம்.சி.ஏ. பிரதிநிதிகள் வடமாகாண ஆளுநர் நாக லிங்கம் வேதநாயகனைச் சந்தித்து, இவ் வாண்டின் சுற்றுச்சூழல் கருப்பொருளை எடுத்துரைக்கும் நினைவுக்கொடிகளை யும், புத்தக அடையாள அட்டைகளையும் வழங்கினர். தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டச் செயலர் எம். பிரதீபனைச் சந் தித்தனர். சந்திப்பில் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களிடையிலும், மக்களி டையிலும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மேம்படுத்துவது தொடர்பாகவும், அவர் களை இயற்கைப் பாதுகாப்பின் முன் னோடிகளாகவும், விழிப்புணர்வுத் தூது வர்களாகவும் உருவாக்குவது தொடர்பா கவும் கலந்து ரையாடி னர். (க)




# கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 6
வரணி வங்கிக்குட்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப் படை அமைப்பால் போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ் வாய்க்கிழமை ஜே/320 இராமாவில் கிராம அலு வலர் பிரிவின் இராமாவில் முருகன் ஆலய பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் 2025ஆம் ஆண்டுக்கான கொடிதின சேமிப்பிலி ருந்து 92 பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை மற்றும் காலணி என்பன வழங்கப்பட்டன.

கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திருமதி க.தவமலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந் தினராக தென்மராட்சிப் பிரதேச செயலாளர் எவ். சி.சத்தியசோதி, சமுர்த்தி தலைமைப்பீட முகாமை யாளர், தென்மராட்சி சமுர்த்தி வங்கி முகாமைத்து வப் பணிப்பாளர், வரணி சமுர்த்தி வங்கி முகாமை யாளர், கொடிகாமம் சமுர்த்தி வங்கி முகாமையாளர், அரச உத்தியோகத்தர்கள், நலன்விரும்பிகள், சமுர்த்திப் பயனாளிகள், பாடசாலை மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (எ-41-159)




# மன்னார் மருத்துவமனைக்கு ரூ.20 இலட்சத்தில் உபகரணங்கள்

மன்னார், ஜூன் 6
மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு, அபி விருத்திக் குழுவின் விசேட கோரிக்கைக்கு அமை வாக, சுமார் 20 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறு மதியான அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டுள்ளன. ஜேர் மன் மக்கள் மற்றும் அந்த நாட்டு அரசாங்கத்தின் அனுசரணையில், (international Human Rights Global Mission) அமைப்பின் ஒருங்கிணைப்புடன் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. சட்டத்தரணி லுக்மான் சஹாப்தீன் ஒழுங்கமைப்பில், மருத்துவ மனை அபிவிருத்திக்குழுவால், மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் எம்.எச்.எம். ஆஸாதிடம் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. நோயாளி களுக்கான சக்கர நாற்காலிகள், இயன்முறை மருத் துவ (Physiotherapy) உபகரணங்கள், சேலன் தாங்கி கள், ஊன்றுகோல்கள் உள்ளிட்ட அத்தியாவசிய உபகரணங்களே கையளிக்கப்பட்டுள்ளன. (க-56)





நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி வித்தியாலயத்துக்கு, சாமியாபிள்ளை கமலாம்பிகை இணையரின் ஞாபகார்த்தமாக வித்தியாலய பழைய மாண வன் சா.தருமராசாவால், சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் தொடர்ந்து வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலை வளாகத்துள் கால்நடைகள் உட்பிரவேசிப்பதைத் தவிர்க்கும் முகமாக கடவை அமைப்பதற்கும் உதவியுள்ளார். (க)





குப்பிழான் வடபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் ஒன்பதாம் திருவிழா கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது. அதில் ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசா லையில் தரம் ஒன்றில் கல்வி பயிலும் மாணவி விக்டர் அரவிந்தன் அனர்த்திகா நாட்டியாஞ்சலி நிகழ்வை நிகழ்த்தினார். (எ-41-66)

# வீட்டுத்திட்டத்துக்காக 27 பேருக்கு காசோலை

தென்மராட்சி, ஜூன் 6
தென்மராட்சிப் பிரதேசத்தில் வீடமைப்பு நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் வீடமைத்தலுக்கான கட்டம் மூன்றில் தெரிவுசெய்யப்பட்ட 27 பயனாளிகளுக்கு, முதலாம் கட்டக் கொடுப்பனவான தலா 4 இலட்சம் ரூபா பெறு மதியான காசோலைகள் கடந்த புதன்கிழ மை வழங்கப்பட்டன. தென்மராட்சிப் பிரதே சத்தில், கட்டம் ஒன்றில் 29 வீடுகளும், கட்டம் இரண்டில் 34 வீடுகளும் வழங்கப் பட்டு, கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.



இந்த வருடம் 106 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். முதற்கட்டக் கொடுப் பனவு வழங்கப்பட்டுள்ளது. நான்காம் கட் டத்தில் 16 பயனாளிகள் தெரிவுளசெய்யப் பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அந்நிய மதமாற்ற அநீதியும் சங்கிலி மன்னனும்!



சைவப்புலவர் N.P.சிறிந்திரன்
செயலாளர்
சங்கிலி மன்னன் நினைவு தினக்குழு.

மாவீரன் இரண்டாம் சங்கிலியன்,யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதி மன்னன். கி.பி. 1519 தொடக்கம் 1561 வரை ஆட்சி புரிந்தவன். சைவத்தமிழ் மன்னன். போர்த்துக்கேயப் பறங்கிப் படைகளிடமிருந்து சைவத்தையும் தமிழையும் இறுதிமூச்சு வரை காப்பாற்றியவன். போர்த்துக்கேயரின் கட்டாய மதமாற்ற நடவடிக்கைகளுக்கு சிம்ம சொப்பன மாக விளங்கியவன்.

1619 ஆம் ஆண்டு சங்கிலி மன்னன் கைது செய்யப்பட்டு கோவா சிறையில் அடைக்கப்பட்டான். அங்கு கி.பி. 1619 தொடக்கம் 1621 வரை மரண தண்டனை நிறைவேற்றும் வரை போர்த்துக்கீச தளபதிகள் பலரும் சங்கிலியனை மதமாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருந் தனர். அவனைச் சங்கிலியால் கால், கைகளைப் பிணைத் தும் பல துன்புறுத்தல்களை செய்தும் அதிகார அச்சுறுத் தல்களை மேற்கொண்டும் மதம் மாறும்படி கட்டாயப்படுத் தினார்கள். பணிய வைக்க முயற்சி செய்தனர்.

அஞ்சாநெஞ்சுரமும் சைவத்தமிழ் பற்றும் வைராக்கியமும் கொண்ட மாவீரன் சங்கிலியன் முன்னால்,பறங்கிப் படை கள் தோற்று வெட்கித் தலை குனிந்து நின்றனர். ஏறக் குறைய இரு வருடங்களாக போர்த்துக்கேயப் படைகள் சங்கிலியன் மனத்தை மாற்றி,மதம் மாற்றம் செய்ய எடுத்த முயற்சிகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகிப் போயின.

கடுங்கோபம் கொண்ட போர்த்துக்கேயத் தளபதி கி.பி. 1621 ஆம் ஆண்டு சங்கிலியனை இந்தியாவின் கோவா வில் தூக்கிலிட்டு துடிதுடிக்க மரண தண்டனை வழங்கி னான். அன்றைய தினமே வைகாசி தேய்பிறை எட்டாம் நாள். இந்தப் படுகொலை நடந்து இன்றுடன் 407வருடங் கள் பூர்த்தியாகிவிட்டன.

இந்தக் கொடூரமான கொடுமை நிறைந்த நிகழ்வை நினைவுகூரும் வகையில் 2 ஆம் சங்கிலி மன்னனின் நினைவுதின நாளை மேற்குறித்த நாளில்,சங்கிலி மன் னன் நினைவுதின குழு கடந்த பல வருடங்களாக அனுஷ் டித்து வருகிறது. இன்றும் எமது சிவபூமி ஆகிய இலங்கை திருமண்ணில் சிலர் கட்டாய மதமாற்ற நடவடிக்கை களில் ஈடுபட்டு வருவதைக் காணலாம். வறுமை, பொருளாதார நெருக்கடி, குடும்பப் பிரச்சினைகள் உள்ள சைவத்தமிழ் குடும்பங்களை வஞ்சகத்தன மாக, கபடத்தனமாக ஏமாற்றி மதமாற்ற நடவடிக் கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கல்விவலயங்களிலும் பாடசாலைகளிலும் மத மாற்ற வெறியர்கள் செயற்பட்டு வருகின்றனர். தெல்லிப்பழை நல்லிணக்கபுரத்தில் சட்டவிரோதமாக தேவாலயம் அமைத்து மதம்மாற்றிவருகின்றனர். மன் னார் சிவபூமியெங்கும் வீதியோரங்களில் சட்டவிரோதமாக அந்நிய மதச்சின்னங்களை நிறுவி வருகின்றனர். இந்த மத மாற்றத்தின் உச்ச நிகழ்வாக திருக்கேதீஸ்வர வளைவு உடைப்பை நாம் கூறலாம். மதமாற்ற நடவடிக்கை ஒரு புறம் இடம்பெற்று வரும் அதேவேளை சைவப் பெண் பிள்ளைகளை ஏமாற்றி வற்புறுத்தி பாலியல் வன்புணர்வு செய்யும் கொடுமையும் நிகழ்ந்து வருகிறது. அண்மையில் துணுக்காய் மல்லாவி பகுதியில் இடம்பெற்ற சம்ப வம் இதற்கு ஒரு உதாரணமாகும்.


மாவீரன் சங்கிலி மன்னனின் மரபில் வந்த சைவத் தமிழ் மக்களே! இந்த மதமாற்ற கொடுமை களை அனுமதிக்கலாமா? வீரத்தமிழன் சங்கி லியன் போல் பொங்கி எழவேண்டாமா? சைவ நீதியை நிலை நாட்டவேண்டாமா? சைவத்தமிழ் பெண்பிள்ளைகளுக்கு இடம் பெறும் பாலியல் கொடுமைகளைத் தடுக்க வேண்டாமா.?

மாவீரன் சங்கிலியன் நினைவு நாளில் ஒவ்வொரு சைவத் தமிழ் குடிமகனும் விழித்தெழ வேண்டும். வீரம் நிறைந்த போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அகிம்சை,சத் தியம் ,தர்மம் ஆகிய வழிகளில் குரல் கொடுக்க முன்வர வேண்டும். இலங்கை திருநாட்டின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப செயற்பட்டு சைவத்தின் காவலராக நாவலர் போல், இரண்டாம் சங்கிலி மன்னன் போல் உருவாகவேண்டு மென,சங்கிலி மன்னன் நினைவு நாளில் உறுதி பூணு வோம்.

சங்கிலியனின் நினைவு தின விழாவின் ஊடாக எமது அடுத்த சந்ததிக்கு வீரவரலாறுகள் கைமாற்றப்பட வேண் டும். சங்கிலியன் போன்று அனைத்து சைவத்தமிழ் மக்க ளும் சைவம் காக்க புறப்பட வேண்டும். அதுவே! சங்கிலிய மன்னனுக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

அஞ்சாநெஞ்சுரமும் சைவத்தமிழ் பற்றும் வைராக்கியமும் கொண்ட மாவீரன் சங்கிலியன் முன்னால்,பறங்கிப் படைகள் தோற்று வெட்கித் தலை குனிந்து நின்றனர். ஏறக்குறைய இரு வருடங்களாக போர்த்துக் கேயப் படைகள் சங்கிலி யன் மனத்தை மாற்றி,மதம் மாற்றம் செய்ய எடுத்த முயற்சிகள் எல்லாம் விழ லுக்கு இறைத்த நீராகிப் போயின.

## சங்கிலியரின் இறுதிப்போர்



நெடுந்தீவின் காற்றுக்கு
பறங்கியின் உடலில் வீசும்
மாட்டுக் கொழுப்பின் நாற்றம்
சற்றும் பிடிக்கவில்லை.

குமட்டிய காற்றின் வாந்தி
கரையெல்லாம் நுரையாக கழிந்திருக்க
சங்கிலிய வாளின் முனையைப்போல
காற்றின் கூர்முனைக் கத்தி
மரக்கலப் பாயில் பொத்தலிட்டன.

எரி நட்சத்திரங்கள் உதிரும்
ஓர் அமங்கல இரவில்
முகிலாடை கருக நிர்வாண நிலவின்
சாபக் கீற்றுக்கள் கடல்வீழ்ந்து தெறிக்க
துக்குறிகளால் ஆசிர்வதிக்கப்பட்ட
'மார்ட்டின் அல்போன்சா' பறங்கியத்
தளபதியின் வெள்ளைத் தோலில்
உறுத்திய உப்புத் துளிகள்
சங்கிலியக் குருதியின் வீரம்
உணர்த்தின.
பூனை விழிகளுள் கடல்நீர் கரித்து
சங்கிலியச் சினம் கண்வழி ஒழுகிற்று.

தீ மலையேறியும் தேன் வடிக்கும்
எண்ணம் பறங்கிக்கு.
சாமலையேறினும் சாதிக்கும்
உள்ளம் சங்கிலிக்கு.
பறங்கியும் பண்டாரமும் பொருதினர்.
போரின் விளிம்பில்........!

பருவக் காற்றில்
அருவமாய் கலந்து
காற்றின்றிய வெற்றிடத்தில்
காணாப் படிமமாய் இன்றும்
பூனைக்கண்ணுக்கு புலப்படாது
நின்றுலவுவான் சங்கிலியன்.

*

நந்திக் கடலின் தொடுவானம் கருக
அதே காற்றின்றிய வெற்றிடத்தில்
உதிரக் காற்றில் ஊனாய்க் கலந்து
காணாப் படிமமாய் என்றும்
புத்தன் கண்ணுக்கு புலப்படாமல்
நின்றுலவுவான்
கரிகாலச் சங்கிலியன்.

கவிஞர் வேல். லவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இளம் நீர்வாண்மையாளர்களால் நயினாதீவின் நீர்வளம் ஆய்வு!



யாழ்ப்பாணம், ஜூன் 6
நயினாதீவின் நன்னீர்வளம் தொடர்பான களப்பயணம் மற்றும் மக்கள் சந்திப்பு கடந்த வாரம் இடம்பெற்றது. WASPAR திட்டத்தின் சார்பில், இளம் நீர்வாண்மையாளர் வடக்கு வட்டத்தினர் இதனை முன்னெடுத்தனர்.

திட்ட ஒருங்கிணைப்பாளரும், விவசாய, சூழலியல் பேராசிரியருமான நடராஜா சிறிஸ்கந்தராஜா தலைமையில், நீரியல் ஆய்வைப் பயிலும் துறைமையாளர்கள், யாழ். பல் கலைக்கழகத்தின் நீர்வள மாணவர்கள் ஆகியோர் இணைந்து கள ஆய்வை முன்னெடுத்தனர். நயினாதீவிலுள்ள பாரம்பரியக் கிணறுகள், குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகளின் அமைவிடம், பரம்பல், பயன்பாடு உள்ளிட்ட பல விடயங்களை நேரடியாகப் பார்வையிட்டு, நீரின் தரம், உப்புச் செறிவு, உவர் நீராதல் நிலைமை உள்ளிட்ட பல விடயங்களை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்தனர். அத்துடன் அங்கு வாழ்ந்துவரும் மக்களின் கருத்துகளையும் கேட்டறிந்தனர். கள ஆய்வின் முதல்நாளன்று பாடசாலை மாணவர்களுக்கு நீர் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இரண்டாம் நாளில் குளங்கள், கிணறுகளில் உள்ள நீரின் தரம் பரிசோதனை செய்யப்பட்டது. கள ஆய்வின் இறுதி நாளன்று ஆய்வில் ஈடுபட்ட அணியினர் தாங்கள் கண்டறிந்த விடயங்களை நயினாதீவு மக்களிடையே பகிர்ந்துகொண்டனர்.
(க-66)



# மாணவர்களுக்கு விழிப்புணர்வு

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத் தரங்கு கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.
சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில், Urgent Climate Change எனும் தொனிப்பொருளின்கீழ் பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாடு முழுதும் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. அதற்கமைவாக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற கருத்தரங்கை, மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் ஆரம்பித்துவைத்தார். கருத்தரங்கில் பாடசாலை அதிபர் எஸ்.ஜோன் செல்வரட்ணம், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் விமல் டிலக்மினி, சுற்றாடல் உத்தியோகத்தர் சி.லதீஸ்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (க)

# பொதுஜன பெரமுனவில் புதிய நிர்வாக மாற்றம்!

கொழும்பு, ஜூன் 6
மாகாணசபைத் தேர்தலில் வேட்புமனு வழங்குவது தொடர்பான விவகாரத்தைக் கையாள்வதற்கு பொதுஜன பெரமுன குழுவொன்றை அமைத்துள்ளது. அத்துடன், மேலதிகமாக இரு உப தலைவர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கை சேர்ந்தவர்களுக்கு அந்தப் பதவி வழங்கப்படவுள்ளது. (ம-இ)


## மாபிள் வேலை

மேல்மாடி வீட்டு படி வேலைகள், மாபிள் வேலைகள் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 076 470 4894
(CS31937)A

## தவறவிடப்பட்டுள்ளது

01.06.2026 திங்கட்கிழமை அளவெட்டி, கும்பாவளை பிள்ளையார் வீதியில் இருந்து ரூபன் கடை செல்லும் வீதி வரையான பிரதேசத்தில் வீட்டுத் திறப்பு ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ரூபன் கடையில் ஒப்படைக்கவும்.
ரூபன் கடை :- 076 295 9564
(CR/47638) J-1

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், கொழும்பு, கிளிநொச்சி, பருத்தித்துறை மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
குறிப்பு: கிளிநொச்சி, வவுனியா பிரதேசங்களுக்கு உடனடியாக வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.)
தொடர்பு:077 386 6250
(CS 61268) J-1

## காணி வாடகைக்குத் தேவை

கார் கராஜ் (Tinkering Garage) ஒன்றினை அமைத்து கொள்வதற்கு திருநெல்வேலி / கோண்டாவில் / ராச வீதி பகுதியில் வாடகை or குத்தகை அடிப்படையில் காணி ஒன்று தேவைப்படுகின்றது.
தொடர்பு: 076 418 7355
077 579 2399
(CS 31935) A

## Chundikuli Girls' College, Old Girls' Association, Jaffna

### Annual General Meeting

Date : Saturday, 20th June, 2026
Venue : College hall

| | | |
|---|---|---|
| 9.00 a.m. | : | Holy Communion & worship service at St. John the Baptist's Church |
| 10.30 a.m. | : | Principal's Tea |
| 11.00 a.m. | : | AGM |
| 12.30 p.m. | : | Fellowship Lunch |

Tickets - Rs. 1000/=
All Old Girls are cordially invited

Secretary


## மரண அறிவித்தல்



தோற்றம்
01 . 11 . 1948

மறைவு
05 . 06 . 2026

### பொன்னம்பலம் ஆச்சிப்பிள்ளை

கைதடி வடக்கை பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி கிழக்கு, அரசன்திடலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் ஆச்சிப்பிள்ளை அவர்கள் நேற்று (05.06.2026) வெள்ளிக்கிழமை சிறுப்பிட்டியில் இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற வல்லிபுரம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் மஞ்சுளாதேவி, தவமதி, கேதீஸ்வரன் (அதிபர் - புன்னாலைக்கட்டுவன் ம.வி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராஜ்மோகன், பாலேஸ்வரன், சிவானி (உதவிக்கல்விப் பணிப்பாளர் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹரிகரன், ஹம்சத்வனன், புரகீசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி கிழக்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P:077 66 70 000
(CS 31940)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## செம்மணிப்...

களின் என்புத் தொகுதிகள் உட்பட 11 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டன. இதேவேளை, 13என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு இலக்கமிடப்பட்டுள்ளன. இதன்படி, செம்மணிப் புதைகுழியில் இருந்து 296 மனித என்புத் தொகுதிகள் நேற்றுவரை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 290 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. புதைகுழிக்குள் இருந்து இரும்புத் துண்டொன்றும் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டு சான்றுப்பொருளாக அடையாளம் இடமிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா, சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், ருகுணு பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள், தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட குழுவினர் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி ரணித்தா முன்னிலையாகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)




## டொலரின் இருப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 6

இலங்கையின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு கடந்த மே மாதத்தில் 1.6 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. இதன்படி, கடந்த ஏப்ரல் மாதத்தில் 6.766 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பின் அளவு, மே மாத இறுதியில் 6.873 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

இந்தக் கையிருப்புத் தொகையானது, சீன மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயப் பரிமாற்றல் வசதியின் கீழ் கிடைத்த நிதியையும் உள்ளடக்கியது என மத்திய வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

## அரசியல்வாதிகள்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி அநுர தலைமையிலான தற்போதைய அரசாங்கம் குற்றங்கள் எதையும் சகித்துக்கொள்ளாது. போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய நபர்களை நாங்கள் தற்போது தொடர்ச்சியாகக் கைது செய்து வருகின்றோம். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக குற்றப்பின்னணி உள்ள அரசியற்தலைவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் விரைவில் இடம்பெறவுள்ளன. வெளிநாடுகளில் பதுங்கியிருந்தாலும் அவர்களால் தப்பிக்க முடியாது. நாங்கள் நிச்சயம் அவர்களைத் தேடிச்செல்வோம் - என்றார். (அ-ம)

## உற்பத்தியாளர்...

உட்பட்ட வியாபார நிலையமொன்றில் கடந்த மாதம் 17ஆம் திகதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ப.தினேஷால் தரமற்ற பாணிப்பனாட்டுகள் மீட்கப்பட்டன. அவை அரசாங்க பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட நிலையில், அந்தப் பாணிப்பனாட்டு மனிதப் பாவனைக்கு உகந்தது அல்ல என்று உறுதிப்படுத்தப்பட்டது. இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையிலேயே குறித்த பாணிப்பனாட்டை உற்பத்தி செய்த நபருக்கு 6 மாதகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, தரமற்ற பாணிப்பனாட்டை விற்பனை செய்த நபருக்கு 8 ஆயிரம்ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (அ-ம-422-100)

## 8 மாகாணங்களில்...

பெரமுனவுக்கு ஒவ்வொரு நாளும் ஆதரவு பெருகி வருகின்றது. குறிப்பாக கிராமிய மட்டங்களில் பொதுஜன பெரமுனவுக்குப் பேராதரவு கிடைத்துள்ளது. தேர்தலை எதிர்கொள்ள அச்சப்படும் நிலையில் நாங்கள் இல்லை. அதனால்தான் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு மிகவும் துணிச்சலாகக் குரல்கொடுத்து வருகின்றோம். கட்சி தாவினால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோகும் சட்டத்துக்கு நாங்கள் எதிர்ப்பில்லை. அந்தச் சட்டத்தை நாம் நிச்சயமாக ஆதரிப்போம் - என்றார். (அ-ம-இ)

## தேர்தல்...

என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தலை எத்தகைய முறைமையின் கீழ் நடத்துவது என்பது தொடர்பில் தொடர்ந்தும் இழுபறி நிலைமை நீடித்து வருகின்றது. இவ்வாறான பின்னணியிலேயே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறை குறித்து தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு இல்லை. எனவே, நாடாமன்ற விசேட செயற்குழு தமது விதப்புரை அறிக்கையை மூன்றுமாத காலத்துக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (அ-ம)

## எரிவாயு...

நிறுவனம் அறிவித்துள்ளது. நிறுவனத்தின் செலவுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் தொடர்ச்சியான விற்பனை வளர்ச்சி போன்றவற்றின் காரணமாக கிடைத்துள்ள நிதி வலிமையைக் கொண்டு, நுகர்வோருக்கு இந்த நிவாரணத்தை வழங்க முடிந்துள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்தன தெரிவித்துள்ளார். (அ-ம)

## திட்டமிட்டு...

நேற்றுப் போராட்டத்திலும் பேரணியிலும் ஈடுபட்டனர்.

இதன்போது அவர்கள் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சுகாதாரப் பணியாளர்களாகிய நாங்கள் கடந்த 5 வருடங்களாக நிலையான ஊதியம் இல்லாமல் சேவையை மேற்கொண்டு வருகின்றோம். இவ்விருக்கையில் தற்போது வழங்கப்படவுள்ள நியமனங்களில் எம்மை இணைக்காது இன்று நேர்முகத்தேர்வை நடத்தவுள்ளனர். நாங்கள் எமக்கு நியமனங்கள் கோரி கடந்த காலங்களில் அமைச்சர்களைச் சந்தித்தபோது சேவையில் இருக்கும் 170 பேருக்கும் முன்னுரிமையின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் என்ற வாக்குறுதி எமக்கு வழங்கப்பட்டது. தற்போதைய அரசாங்கமும் அந்த வாக்குறுதியை எமக்கு வழங்கியிருந்தது. ஆனால் தற்போது நாங்கள் திட்டமிட்ட ரீதியில் ஏமாற்றப்பட்டுளோம். 180 நாள்கள் சேவையில் இருந்தால் அவர்கள் பணிக்கு உள்வாங்கப்படுவார்கள் என்று எமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதி பொய்த்துப் போயுள்ளது. எனவே, எமக்கு நீதிகிடைக்கும்வரை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் - என்றார்.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகவும் சுகாதாரத் தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெ.ரஜீவன், இளங்குமரன் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடல் நடத்தியதுடன், அவர்களுக்கு காத்திரமான தீர்வு பெற்றுத்தரப்படும் என்று வாக்குறுதி வழங்கினார்கள். (அ-ம-66)

## மயிலிட்டி...

ஜே/249, 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே ஏழாவது வாரமாக நேற்றும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்றைய போராட்டத்தில் கலந்துகொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-20-66)


## வட்டுக்கோட்டையில்...

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிளவத்தைப் பகுதியில் வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த வன்முறைக் குழுவொன்று அந்த வீட்டின் மீது சரமாரியான தாக்குதல் நடத்தியுள்ளது.

வீட்டில் எவரும் இல்லாத தருணத்தில், அந்த வீட்டின் பிரதான கதவு வழியாக உள்நுழைந்த வன்முறைக்குழு அங்கிருந்த பொருள்களை அடித்துச் சேதப்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது. சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-27)

## சிவகுமாரனின்...

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொன்.சிவகுமாரனின் சகோதரி சிவகுமாரி சுடரேற்றி அஞ்சலித்து நினைவேந்தல் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். ஒருநிமிட அகவணக்கத்தைத் தொடர்ந்து சிவகுமாரனின் உருவச்சிலைக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டுத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு. நினைவஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது. (அ-ம-26-20-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கலாசாலையில் சுற்றுச்சூழல் தினம்

யாழ்ப்பாணம்,ஜூன் 6
சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில், விசேடநிகழ்வுகடந்தபுதன்கிழமை இடம்பெற்றது. கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், தமிழ் தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். நிகழ்வின் அறிமுக உரையை கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் சிவலோசனி சுரேந்திரன் ஆற்றினார். (க-27-66)




தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி அலகின் இந்த வருட 'போதைப்பழக்கத்தைத் தவிர்ப்போம் ஆரோக்கியமான வாழ்வை அடைவோம்' எனும் தொனிப்பொருளில் புகைத்தல் மற்றும் போதைப்பொருள் எதிர்ப்புக் கொடிதின சேமிப்பு விழிப்புணர்வு அண்மையில் இடம்பெற்றது. பிரதேச செயலர் எவ். சீ. சத்தியசோதி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச-9)

பருத்தித்துறை தம்புருவளை சித்திவிநாயகர் கோவில் பெருந்திருவிழாவின் சப்பறத் திருவிழா அண்மையில் நடைபெற்றது. (ச-9)



## விவசாயிகளுக்கு உரம் விநியோகம்



கிளிநொச்சி,ஜூன் 6
கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தின்கீழ் 2026ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு, யூரியா உரம் விநியோகிக்கப் பட்டுவருகின்றது. அதற்கமைவாக கமநல சேவை நிலையங்கள் ஊடாக 50 கிலோ யூரியா உரம் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் வழங்கப்படுகின்றது. (க-113)

**சாயி முதியோர் பராமரிப்பு சேவை**

உங்கள் தாய் தந்தையினரை வீட்டில் வந்து பராமரிக்க வேண்டுமாயின் எங்களிடம் தொடர்புகொள்ளுங்கள்.
நம்பிக்கையான ஊழியர்கள். சிறந்த பராமரிப்பு.
தொடர்புகளுக்கு:077 500 5412
CS319396A

**காணி விற்பனைக்கு**

களுக்காவத்தை அல்வாய் மேற்கு, அல்வாயில் திக்கம் வடிசாலைக்கு முன்னுள்ள வீதியில், இளம்பிறை வாசிக சாலையின் வலப்பாக்கமாக உள்ள வீதியில் 2 பரப்பும் 7.3 குழி, முதல் காணி. இக்காணி இரண்டு பெரிய கதவுகளை கொண்டது. கேற்றுடன் கூடிய மதில் காணப்படுகின்றது.
தொடர்புகளுக்கு:
076 148 7678
(CS 319036)A

**வேலையாட்கள் தேவை**

சுன்னாத்தில் அமைந்துள்ள புடைவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் பெண் வேலையாள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
விபரங்களுக்கு: 076 63 23 554

நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தின் சமுர்த்திப் பிரிவின் ஏற்பாட்டில் சர்வதேச புகைத்தல் எதிர்ப்புதின நிகழ்வு, பிரதேச செயலர் என்.பிரபாகரன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (க)




**காணி விற்பனைக்கு**

* யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பிரதான வீதியில் 07 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு.
* யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான வீதி முகப்புடன் மூன்று பரப்புகளாக பிரிக்கப்பட்ட நிலையில் ஒருபரப்பின் விலை 1,200,000 பன்னிரெண்டு இலட்சம்.
* பின்பகுதி இரண்டு பரப்பாகவும் ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 20 அடி பாதையுடன் ஒரு பரப்பு எட்டு இலட்சம் முதல் ஆறு இலட்சம் வரை
* வீடுகள் அமைப்பதற்கும் வியாபார நிலையங்கள் அமைக்கவும் உகந்த நிலம்.
* யாழ்.நகரில் இருந்து **4 Km** தூரம்.

077 9886 389
076 077 2674


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 06.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org